எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம், 110, அண்ணாசாலை, சென்னை-2.
எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இணை இயக்குநர் அவர்களின்
செயல்முறை ஆணைகள்.

முன்னிலை : திரு.சி.ந.வரதராவ், இணை இயக்குநர்.

ஆணையரக செ.மு.ஆ.எண். இ1/32764/2021 நாள்.01.02.2024.

பொருள்: பணியமைப்பு - எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம், சென்னை-2 - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் 2017-18ம் ஆண்டுக்கான தொகுதி II A (நேர்முகத்தேர்வு அல்லாத பதவிகள்)- எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 54 தெரிவாளர்களில் திரு.K.மணிகண்டன், உதவியாளரின் தற்காலிக பணியினை வரன்முறை செய்து ஆணையிடுதல் - குறித்து.

பார்வை: 1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-03, அவர்களின் கடித எண்.6009/PSD - D) நாள்.31.10.2018
2. ஆணையரக செ.மு.ஆணை எண்.இ1/19224/2018, நாள்.14.11.2018

------

பார்வை-1ல் காணும் 31.10.2018 நாளிட்ட செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வணையம், சென்னை-03 அவர்களின் கடிதத்தின்படி 2017-2018ஆம் ஆண்டு தொகுதி-II A (நேர்முகத் தேர்வு அல்லாத பதவிகள்) நேரடி நியமன முறையில் திரு.K.மணிகண்டன் என்பவருக்கு உதவியாளர் ஆக பணிநியமனம் செய்து இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பார்வை-02ல் காணும் 14.11.2018 நாளிட்ட ஆணையரக செயல்முறை ஆணையின்படி எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையில் தற்காலிகமாக இவர், 26.11.2018 முற்பகல் முதல் இத்துறையில் அரசு எழுதுபொருள் அலுவலகம், சென்னை-01ல் உதவியாளராக பணியேற்பு செய்துள்ளார்.

2) பார்வை-01ல் காணும் 31.10.2018 நாளிட்ட தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் சென்னை-03 அவர்களின் கடிதத்தில் திரு.K.மணிகண்டன், உதவியாளர் பழங்குடியினர் வகுப்பினைச் சார்ந்தவர் எனும் விவரங்கள் State Level Scrutiny Committee ஆய்வு செய்து அறிக்கை பெறப்பட்ட பின்னரே இப்பணியாளரது தற்காலிக பணியினை வரன்முறை செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்றும், இப்பணியாளரது சாதிச் சான்றிதழின் உண்மைத் தன்மையானது இவர் பணிபுரியும் துறையால் ஏற்றுக்கொள்ளப்படும் பின்னரே தற்காலிக பணியினை வரன்முறை செய்யப்பட வேண்டும் என நிபந்தனை வழங்கப்பட்டுள்ளது.

3) இதன்படி திரு.K.மணிகண்டன், உதவியாளர் பழங்குடியினர் வகுப்பினைச் சார்ந்தவர் எனும் விவரங்கள் State Level Scrutiny Committee ஆய்வு செய்து அறிக்கை பெறப்பட்டு இவ்வறிக்கை எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையால் ஏற்றுக்கொள்ளப்பட்டு இவ்விவரம் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திற்கும் தெரிவிக்கப்பட்டது.

4) மேலும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3 அவர்களின் கடிதத்தில் பத்தி எண்.5ல் பணிவரன்முறை பின்வரும் நிபந்தனைகுட்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"The regularization is subject to the outcome of the WPs (if any)pending on the files of the Hon'ble High court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Group–II A Services 2017–2018 recruitment"

5) மேற்குறிப்பிட்ட 31.10.2018 நாளிட்ட செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3 அவர்களின் கடிதத்தில் பத்தி எண்.5ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி, திரு.K.மணிகண்டன் உதவியாளர் பணியினை மேதகு உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் நிலுவையில் உள்ள 2017–18 ஆம் ஆண்டிற்கான குரூப்–II A பணியாளர் தேர்வு குறித்த வழக்கின்(writ petition) தீர்ப்பிற்கு உட்பட்டு மேலே பத்தி–3ல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு திரு.K.மணிகண்டன் உதவியாளரின் தற்காலிக உதவியாளர் பணியினை இப்பணியாளர் உதவியளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 26.11.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

6) மேலும், திரு.K.மணிகண்டன் உதவியாளர் பணிவரன்முறை படுத்தப்பட்ட நாள் முதல் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தில் வைத்தும், இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தினை தொடர்ச்சியான மூன்றாண்டு காலத்திற்குள் நிறைவு செய்ய வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

7) மேலும், திரு.K.மணிகண்டன் உதவியாளர் தகுதிகாண் பருவ காலத்தில் உதவியாளர் பதவிக்கென வரையறுக்கப்பட்ட துறைத்தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும், பவானிசாகர் அடிப்படைப் பயிற்சியினை நிறைவு செய்திட வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது

சி.ந.வரதராவ்,
இணை இயக்குநர்.

<u>பெறுநர்</u>

திரு.K.மணிகண்டன்,
உதவியாளர்,
அரசு மைய அச்சகம்,
சென்னை–1

} பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–1 – மூலமாக.

<u>நகல் பெறுநர்</u>

1. பணிமேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–1.
2. உதவி இயக்குநர்(பணி/பட்டியல்), அரசு மைய அச்சகம், சென்னை–1.
3. சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சம்பளக் கணக்கு அலுவலகம்(வடக்கு), சென்னை–1.
4. கண்காணிப்பாளர் "இ" பிரிவு / "இ4" உதவியாளர், ஆணையரகம், சென்னை–2.
5. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–3 (தகவலுக்காக)
6. உதிரி–3 நகல்கள்

// உத்தரவின்படி அனுப்பப்படுகிறது //

ஆணையரின் நேர்முக உதவியாளர்.

1/2/2024